


https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

12th NOVEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 53




# இஸ்ரேல் - காஸா போர்:

# இலங்கையில் எரிபொருள் நெருக்கடி



இஸ்ரேல்-காஸா போர் காரணமாக பிராந்தியத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்வதற்காக எரிபொருளை முன்கூட்டியே வாங்கி சேமிக்கும் நிலையில் இலங்கை இல்லை என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

02



# பெற்றோல் - டீசலுக்கு VAT வரி

அடுத்த வருடம் ஜனவரியில் இருந்து பெற்றோல்,டீசல் மற்றும் நிலக்கரிக்கு 18

02

# சீனிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கம்



சீனிக்கான அதிகூடிய சில்லறை விலை இன்று அல்லது நாளை நீக்கப்படவுள்ளது என்று சீனி இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் பரகும் அபயசேகர தெரிவித்துள்ளார்.

சீனியின் இறக்குமதி வரி 25 சதத்தில் இருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதால் இறக்குமதி செய்யப்பட்டு இப்போது துறைமுகத்தில் இருக்கும் சீனிக்கு அதிகரிக்கப்பட புதிய இறக்குமதி வரியை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது.

அதனால் ,அந்தப் புதிய வரியைச் செலுத்தி சீனியை வெளியே கொண்டுவந்த உடனேயே சீனிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்படும் என்று மேலும் கூறியுள்ளார்.

# இஞ்சி - தேசிக்காய் விலை கிடுகிடு

தேசிக்காய் மற்றும் இஞ்சிக்கான தட்டுப்பாடு நிலவுவதால் அவற்றின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

அதன்படி ஒரு கிலோ தேசிக்காயின் விலை 2800 ரூபாவாகவும் இஞ்சி ஒரு கிலோவின் விலை 3000 ரூபாவாகவும் உயர்ந்துள்ளன.

இது தம்புள்ளை வர்த்தக நிலையத்தில் இருக்கின்ற நிலைமை. அங்கிருந்து அவை செல்லும்போது வெவ்வேறு இடங்களில் இவற்றின் விலைகள் வேறுபடும் என்று எதிர்பாக்கப்படுகிறது.





புது சுடர்
www.puthusudar.lk
2023 NOVEMBER 12 - SUNDAY

# வாங்கிக்கட்டும் இஸ்ரேல்

இஸ்ரேல்–பலஸ்தீன் போர் என்பது ஒரு சாதாரண போர் அல்ல.

அது இஸ்லாமிய நம்பிக்கையுடன் தொடர்புபட்டது.

உலக அழிவின் அடையாளங்களுடன் தொடர்புபட்டது. பலஸ்தீன் தொடர்பில் முஹம்மது நபி ஜ ஸல் ஸ அவர்கள் என்னவெல்லாம் கூறியுள்ளார்களோஎன் னென்ன எதிர்வு கூறல்களை தெரிவித்துள்ளார்களோ அத்தனையும் நடந்தே தீரும்.

அவர்கள் அறிவித்த உலக அழிவு அடையாளங்கள் அத்தனையும் நடந்துகொண்டே வருகின்றன.ஹிஜாஸ ில் நெருப்பு போன்ற பல அடையாளங்கள் நடந்து முடிந்துவிட்டன.இன்னும் பெரும் பெரும் அடையாளங்கள் நிகழவுள்ளன.

அவற்றுள் முக்கியமானதுதான் பலஸ்தீனத்துடன் தொடர்புபட்ட அடையாளங்கள்.

இமாம் மஹ்தியின் ஆட்சி,தஜ்ஜாலின் வருகை,ஈஸா நபி அவர்களின் வருகை, தஜ்ஜாலின் கொலை,அல்–அக்ஸா பள்ளிவாசல் மீட்பு என்று பல அடையாளங்கள் இடம்பெறும்.

இப்போது பலஸ்தீன மக்கள் யூதர்களிடம் இருந்து மீட்பதற்காகப் போராடி வருகின்ற அல்–அக்ஸாவை ஈஸா நபி அவர்களே மீட்பார்கள்.

இந்த அடையாளங்கள் எல்லாம் எப்போது இடம்பெறும் என்று சொல்ல முடியாது.ஆனால்,நடந்தே தீரும். அதுதான் இஸ்லாமிய நம்பிக்கை.

இந்த அடையாளங்கள் நிகழும்வரை இஸ்ரேல்–பலஸ்தீன போர் நடந்துகொண்டேதான் இருக்கும். ஆனால்,ஒருபோதும் இஸ்ரேலால் பலஸ்தீனை வெற்றிகொள்ளவே முடியாது.ஈஸா நபி அவர்கள் வரும்வரை சண்டை தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

இப்போது இடம்பெறும் சண்டை மூன்றாவது உலகப் போராக மாறலாம் அல்லது அதைவிட பெரும் சண்டையாக மாறலாம்.

எப்படிப்பட்ட பயங்கரமான சண்டையாக இருந்தாலும்,அது யூதர்களுக்கு வெற்றியைக் கொடுக்காது.அவர்களால் பாலஸ்தீனத்தை பிடிக்கவே முடியாது.

விமானங்கள் மூலம் குண்டுகளை போட்டு காஸாவை முற்றாக அழித்துவிடலாம் என்று நினைக்கிறது இஸ்ரேல்.

அவர்கள் அந்தக் கட்டடங்களை வேண்டுமானால் அழிக்கலாம். பலஸ்தீனை அழிக்கவே முடியாது.

காஸாவுக்குள் தரைவழியாக நுழைந்த இஸ்ரேல் ஹமாஸிடம் கடுமையாக அடி வாங்கிக்கொண்டிருக்கிறது.

நேருக்கு நேரே சண்டை செய்யும் தைரியம் அவர்களுக்கு இல்லை.அப்படி தைரியம் இல்லாத யூதர்களால் எப்படி பலஸ்தீனத்தை கைப்பற்ற முடியும்? ஹமாஸை அழிக்க முடியும்?

தரை வழியால் செல்லாமல் ஹமாஸை அழிக்க முடியாது.தரை வழியால் சென்றால் யூதர்களால் தப்ப முடியாது என்பது இப்பொது உண்மையாகி வருகிறது.

ஹமாஸ் அழிவதை விடவும் யூதர்கள் தப்புவதே யூதர்களின் தேவை.

தரை வழி பயங்கரமானது.ஹமாஸின் பயந்தரமானபலமான சுரங்க பாதைகள் அங்கு அதிகம் உள்ளன.

அதற்குள் இஸ்ரேலிய கனரக வாகனங்கள் சிக்கி அழிகின்றன.

சுரங்கங்களுக்கு அப்பால் கன்னி வெடிகள் அதிகம் அங்கு புதைக்கப்பட்டுள்ளன.

அதில் சிக்கி ஒரு இஸ்ரேலிய இராணுவத்தின் கால் பறந்தாலே போதும். ஏனைய இராணுவத்தின் உள தைரியம் சிதைந்துவிடும்.

கண்ணீர் விட்டு அழுதுவிடுவார்கள் காயப்பட்டவர்களை அப்படியே போட்டுவிட்டு பின்வாங்கிவிடுவார்கள். அதுதான் இப்போது நடக்கிறது.

உலகத்தின் எந்தவோர் இராணுவத்திடமும் இல்லாத பழக்கம்தான் இஸ்ரேலிய இராணுவத்திடம் இருக்கும் கண்ணீர் விட்டு அழும் பழக்கம். இந்த மனநிலையோடு எப்படி சண்டை செய்ய முடியும்?

கைகளில் பலமான துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு பலஸ்தீன சிறுவர்களின் கல் வீச்சுக்களுக்கு அஞ்சி ஓடுபவர்கள் இஸ்ரேலிய படையினர்.

இவர்களா தரை வழியாக காஸாவுக்குள் நுழைந்து ஹமாஸை அழிக்கப் போகிறார்கள்?

ஹமாஸின் மனவலிமைக்கு முன் இவர்கள் வெறும் தூசு. மேலும் காஸாமீதான போரை நிறுத்தாவிட்டால் இஸ்ரேலுக்கு எதிராக துருக்கியும் ஈரானும் களமிறங்கப் போவதாக அறிவித்துள்ளன.

அரபுலகில் இந்த இரண்டு நாடுகளும் பலமிக்க நாடுகள்.இந்த நாடுகள் களமிறங்கினால் இவர்களுடன் சேர்ந்து ரஸ்யா உள்ளிட்ட இஸ்ரேல் எதிர்ப்பு நாடுகளும் களமிறங்கும்.அப்போது இஸ்ரேல் பெரும் அழிவைச் சந்திக்கும். தாம் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதற்காகவே இஸ்ரேலை உருவாக்கி வைத்துள்ளார்கள் யூதர்கள். அப்படிப்பட்டவர்கள் அந்த அழிவை விரும்பமாட்டார்கள்.

ஆனால்,பலஸ்தீன மக்களுக்கு அழிவு என்பது பழகிப்போன ஒன்று. இதனால் பலஸ்தீனை வெற்றிகொள்ள முடியாத இந்தப் போர் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

ஈஸா நபியின் வருகை வரை பலஸ்தீன மக்களும் விடாமல் போராடிக்கொண்டே இருப்பார்கள்.

உலக முடிவுக்கான படுபயங்கரமான போர் எல்லாம் இந்தப் பகுதியில்தான் இடம்பெறும்.அவர்களால் பலஸ்தீனை மாத்திரமல்ல எந்தவொரு முஸ்லிம் நாட்டையும் இவர்களால் முழுமையாகப் பிடிக்க முடியாது.

ஆகவே, இஸ்ரேல் தனக்கு ஏற்படப்போகும் அழிவில் இருந்து தப்ப வேண்டுமென்றால் உடனடியாக போரை நிறுத்தியே ஆக வேண்டும்.

## இஸ்ரேல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**முன்கூட்டியே வாங்கி வைப்பதற்காக பணமோ ,களஞ்சிய வசதியோ இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. ஒரு மாதத்துக்கான எரிபொருளே இப்போது கையிருப்பில் உள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பதிரன தெரிவித்துள்ளார்.**

**மேலதிகமாக எரிபொருளை சேமித்து வைப்பதென்றால் 400 முதல் 500 வரையான அமெரிக்க டொலர் தேவைப்படும்.**

**இப்போது ஒரு மாதத்துக்கான எரிபொருளை சேமித்து வைப்பதற்காக 300 அமெரிக்க டொலர் ஒதுக்கப்படுகிது என்று அவர் கோப் குழுவிற்குக்குத் தெரிவித்துள்ளார்.**

## பெற்றோல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வீத VAT வரியை விதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதனால் எரிபொருளின் விலைகள் 10 வீதத்தால் அதிகரிக்கும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடியாமல் போனதாலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

# Unity Plaza வணிக வளாகம்

# தகவல் தொழில்நுட்ப நிலையமாக மீளப் புனரமைப்பு








– அதற்காக செலவிடப்பட்ட தொகை 400 மில்லியன் ரூபா...

– அரச மற்றும் தனியார் துறை முதலீட்டுத் திட்டத்தின் கீழ் மறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பம்பலப்பிட்டி ருவைலீடயணய வணிக வளாகம் தகவல் தொழில்நுட்ப நிலையமாக மீள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் துறை முதலீட்டு திட்டத்தின் கீழ் இங்கு மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புனரமைக்கப்பட்ட யூனிட்டி பிளாசா வணிக வளாகத்தின் திறப்பு விழா நேற்று (07) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் இடம்பெற்றது.

ருவைலீடயணய வணிக வளாகம் கொழும்பு நகரின் மையத்தில் அமைந்துள்ள முக்கிய வர்த்தக கட்டிடங்களில் ஒன்றாகும். தற்போது, இது அனைத்து தகவல் தொழில்நுட்ப தேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பூர்த்தி செய்யும் முதன்மையான வணிக வளாகமாக மாறியுள்ளது. இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையின் திருப்பு முனை என்று சொல்லக்கூடிய ருவைலீடயணய, புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்கான அரச மற்றும் தனியார் ஒத்துழைப்புக்கு சிறந்த உதாரணம்.

1982 ஜுன் 25 இல், ஒனாலி ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் Unity Plaza நிறுவப்பட்டது. தற்போது, 51% பங்குகள் இந்த நிறுவனத்திற்கு சொந்தமானது. இதில் 45% பங்குகள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது. இந்த வணிக வளாகத்தின் திருத்த வேலைப் பணிகள் 2021 இல் தொடங்கப்பட்டது. அதற்காக சுமார் 400 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இன்று, குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உள்ளாகியுள்ள இந்த வணிக வளாகம், 5 மாடிகளில் கடைகள் மற்றும் 5 மாடிகளில் அலுவலக வசதிகளைக் கொண்டுள்ளது. புதிய மீள் புனரமைப்பு நடவடிக்கைகளுடன், பல வாடிக்கையாளர் நட்பு வசதிகளும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில், ஓனாலி ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் தலைவர் ஆர்ச்சி வர்மன், முகாமைத்துவப் பணிப்பாளர் ஹார்டி ஜமாடின், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்தியானந்த, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர மற்றும் அதிதிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

AUTOGROUP INTERNATIONAL SINCE 2003

# இலங்கையில் விரிவாக்கம்!



In the middle seated Mr. Rob Hill - CEO & Co-Chairman, in his right side standing Mr. Lakshman Balasooriya - Director - Procurement, Mr. Moditha Vidyarathna - Director - General Manager.

In the left side standing Mr. Chamitha Guruge - Director - Production & Engineering, Ms. Dhanoja Jayasekara - Chief Financial Officer, Mr. Buddhika Gunasekara - Director - Human Resources



Mr. Rob Hill - CEO & Co-Chairman

Autogroup International நிறுவனமானது இடது பக்க இயக்க வாகனங்களை வலது பக்க இயக்க வாகனங்களாக மாற்றியமைப்பதில் நிபுணத்துவமிக்க, 100% அவுஸ்திரேலியருக்குச் சொந்தமான நிறுவனமாகும்.

இந்நிறுவனமானது, இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிறைந்த சூழல் மற்றும் அரசாங்க அதிகாரத்துவம் இருந்த போதிலும் இலங்கையில் ஒரு குறிப்பிடத்தக்க புதிய தொழிற்சாலை விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பல சவால்களுக்கு முகம் கொடுத்த இந்நிறுவனத்தின் தலைவர் Peter Hill வலது பக்க இயக்க வாகனங்களை மாற்றியமைக்கும் வணிகத்தை 30 வருடங்களுக்கு முன் அவுஸ்திரேலியாவில் நிறுவினார். இடது பக்கம் இயங்கும் American SUV, Muscle Cars மற்றும் Pickup Trucks ஆகியவற்றை வலது பக்கம் இயங்கும் வாகனங்களாக மாற்றும் இவ்வணிகத்தை அவர் 20 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் முதலீட்டு BOI வணிகமாக நிறுவினார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக அடிமட்டத்திலிருந்து சீரான வளர்ச்சி அடைந்து, இலங்கையில் ஒரு வணிகத்தை வளர்க்க முயற்சிக்கும் வெளிநாட்டு முதலீட்டாளராக பல சவால்களை எதிர்கொண்டு, மிக திறமையான மற்றும் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட, சர்வதேச தரத்திற்கு நிகரான நிபுணர்களைக் கொண்ட ஒரு வெற்றிகரமான நிறுவனமாகும்.















களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் 105வது ஆண்டு நிறைவு விழா கடந்த வியாழனன்று (09) பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலி சப்ரி கலந்து கொண்டதுடன், கௌரவ விருந்தினராக இலங்கைக்கான சீனத் தூதுவர் பங்கேற்றிருந்தார். 1918 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியானது நாட்டிற்காக உழைக்கின்ற பல்லாயிரக்கணக்கானவர்களை உருவாக்கி களுத்துறை மாநகரில் தேசிய பாடசாலையாக விருட்சமாகி தற்போது 105வது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றமை சிறப்பம்சமாகும்.

# பலஸ்தீனுக்கு ஆதரவாக கொழும்பில் சமாதான மாநாடு: பிரகடனம் ஒன்றும் முன்மொழியப்பட்டது

(நூருல் ஹுதா உமர்)

பலஸ்தீனுக்கு பூரண சமாதானத்துடன் நிம்மதியும், சுதந்திர வாழ்வும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் வீ ஆர் வன் அமைப்பு ஏற்பாடு செய்த சமாதான எழுச்சி நிகழ்வு நேற்று நடைபெற்றது.

சர்வமத தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், முக்கிய பல சிவில் சமூக இயக்கங்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இலங்கைக்கான பலஸ்தீன அரசின் தூதுவர் கலாநிதி. ஸுஹைர் எம். எச். டார் செயிட் கலந்து கொண்டார்.

இந்த சமாதான மாநாட்டில் பிரகடனம் ஒன்று வாசிக்கப்பட்டு அந்த மாநாட்டில் கலந்துகொண்ட சர்வமத தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக இயக்கங்கள் ஆகியவற்றின் ஒப்புதலுடன் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு காரியாலயத்தில் குறித்த பிரகடனம் கையளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.







# சீனி இல்லாமல் லொஹான்!

செவனகல சீனித் தொழில்சாலையும் பெலவத்த சீனி தொழில்சாலையும் இப்போது இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த இரண்டு நிறுவனங்களும் முதலில் இருந்தது இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவிடம் இப்போது அவற்றைப் பிடிங்கி திலுமிடம் கொடுத்ததால் கடும் கவலையில் இருக்கிறாராம் லொஹான்.

“என்னிடம் இருந்தது அந்த ரெண்டு நிறுவனம் மட்டும்தான்.இப்ப அதயும் புடிங்கியாச்சு.““ என்று சக அமைச்சர்களிடம் சொல்லி புலம்புகிறாராம் லொஹான்.

இரண்டு சீனித் தொழில்சாலைகளையும் அவரது அமைச்சில் இருந்து பறித்துக்கொண்டதால் சீனி இல்லாமல் தேநீர் குடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் லொஹான் என்று கூறுகிறார்கள் அவரது நண்பர்கள்.

# ஆப்பு வைத்த பசில்

துப்பறிவாளன்



மொட்டு கட்சியில் அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்து நிற்பவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்காமல் ஜனாதிபதி விரும்புகிறவர்களுக்கு வழங்கியுள்ளார் என்று கூறி மொட்டு கட்சியினர் கத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால்,அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காமைக்கு பசில் ராஜபக்சதான் காரணம் என்கிறது ஒரு தகவல்.

பசில் ஏன் இப்படி இரட்டை வேடம் போடுகிறார் என்று தேடிப் பார்த்தால் அதுக்கு ஒரு கரணம் உண்டாம்.

அமைச்சுப் பதவிகளுக்காக மொட்டு கட்சியால் பெயரிடப்பட்டவர்கள் எல்லோரும் இப்போது ஜனாதிபதியுடன் ஒட்டி உறவாடுகிறார்களாம்.

அமைச்சுப் பதவியை எடுத்ததும் அவர்கள் முற்றியும் கட்சியை விட்டுப் போய் ஜனாதிபதியுடன் இணைந்துவிடுவார்களாம்.

அதனால்தான் அவர்களுக்கு பதவி வழங்க வேண்டாம் என்று பசில் ஜனாதிபதியிடம் கூறி அதை நிறுத்திவிட்டாராம்.

ஆனால்,மறுபுறம்,ஜனாதிபதி அமைச்சுப் பதவி தரவில்லை என்று கூறி மொட்டு கட்சி சத்தம் போடுகிறது.

இதுதான் அரசியல்.





# முன் வரிசையால் வந்த வினை

ஐக்கிய தேசிய கட்சியின் சம்மேளனக் கூட்டம் சில நாட்களுக்கு முன் கொழும்பு சுகாததாச உள்ளரங்கில் இடம்பெற்றது அல்லவா.

முன் வரிசையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமர்ந்திருந்தார்.

அவர்களின் protocolலின் அடிப்படையில் கட்சியின் பொது செயலாளர்தான் தலைவருக்கு அருகில் அமர வேண்டுமாம்.

ஆனால், யாரோ பார்த்த வேலையால் தலைவருக்கு அருகில் ருவான் விஜயவர்தனவும் சாகல ரத்நாயக்கவும் அமர்ந்திருந்தார்கள்.

இதனால் வெளியே சொல்ல முடியாமல் இப்போது வரைக்கும் புலம்பித் திரிகிறாராம் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார.



# ஜனாதிபதியின் ஜக்கட்

சில நாட்களுக்கு முன் கொழும்பு சுகததாச உள்ளரங்கில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதிதாக ஜக்கட் ஒன்றை அணிந்து வந்தார்.

அதைப்பற்றித்தான் அங்கு பேச்சு. முதலில் அதுபற்றி ஜனாதிபதியிடம் விசாரித்தார் ஐக்கிய தேசிய கட்சியின் கோட்டே தொகுதி அமைப்பாளர் தினேஷ் விதான பதிரன. “இந்த ஜக்கட் இந்தக் கூட்டத்துக்கு அந்தமாதிரி பொருந்திப் போவுது.” என்றார் விதான பதிரன. அதற்கு பதில் வழங்கிய பாலித ரங்கேபண்டா.” அப்படித்தான் எங்கட சேர். புதுசு புதுசா யோசிப்பார்.புதுசு புதுசா செய்வார்.” என்றார். இவ்வாறு பலரும் அந்த ஜக்கட் பற்றியே ஜனாதிபதியிடம் விசாரித்தனர்.





# மஹிந்தவிடம் முறைப்பாடு

அந்த அமைச்சரவை மாற்றம் தொடர்பாக ஆத்திரமடைந்துள்ள மொட்டு கட்சியின் கொதிப்பு இன்னும் அடங்கவில்லை.

இதற்கு எதிராக ஏதாவது செய்தாக வேண்டும் என்ற திட்டத்தில் உள்ளனர்.

இதில் ஒரு கட்டமாக மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் மஹிந்த ராஜபக்சவின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்து முறைப்பாடு செய்தார்.

தமது கட்சிக்கு ஜனாதிபதி அநியாயம் செய்வதாகவும் சிறிலங்கா சுதந்திர கட்சியில் உள்ளவர்களுக்கே அமைச்சுப் பதவிகளை வழங்குகிறார் என்றும் சாகர கூறினார்.

சாகர கூறிய அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மஹிந்த எந்த பதிலும் வழங்கவில்லை.

“சேர்.. இப்படி அமைதியா இருக்காதிங்க. உடனே ஜனாதிபதிய சந்தித்து ஒரு முடிவ எடுங்க..” என்றார் சாகர.



# அவர் விரும்பாததால்..

அண்மையில் இடம்பெற்ற சிறிய அமைச்சரவை மாற்றம் மொட்டு கட்சிக்குள் இன்னும் சலசலப்பை ஏற்படுத்திய வண்ணமே உள்ளது.

அதுவும் கெஹலிய ரம்புக்வலவிடம் இருந்து சுகாதார அமைச்சைப் பறித்ததுதான் இந்த சலசலப்பு நீடிக்கக் காரணம்.

அவரின் சுகாதார அமைச்சு வழங்கப்பட்டிருப்பது ரமேஷ் பத்திரனவிடம்.

இந்த மாற்றம் அவசரமாக ஏற்படுத்தப்படவில்லை என்றும் பல திட்டமிடப்பட்டிருந்தது என்றும் ஜனாதிபதி வட்டாரம் கூறுகிறது.

அப்போதே ரமேஷ் பத்திரனவுக்கு சுகாதார அமைச்சை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தபோதிலும் ரமேஷ் அதை விரும்பவில்லையாம்.

பல மாதங்களாக அவர் அதே நிலைப்பாட்டில்தான் இருந்தாராம்.இறுதியாக அவர் ஒருவாறு சம்மதித்ததைத் தொடர்ந்தே இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றதாம்.

# நைசாக நழுவிய அந்த எம்பிக்கள்

அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் மூன்று எம்பிக்கள் தயாராக இருந்தனர்.

இரண்டு பெண் எம்பிக்கள் மற்றும் ஓர் ஆண் எம்பி.

அவர்களை கலந்துகொள்ள வைப்பதற்கான ஏற்பாட்டை ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டு அமைச்சர்களே செய்தனர்.

கூட்டம் இடம்பெற்ற அன்றைய தினம் ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் எம்பி ஒருவரின் வீட்டில் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.அதில் அந்த மூன்று எம்பிக்களும் கலந்துகொண்ட பின்னர் கூட்டத்தில் கலந்துகொள்வது என்பதே ஏற்பாடு.

கூட்டம் இடம்பெறுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பே சந்திப்பு ஆரம்பமானது. சந்திப்பில் அந்த மூவரும் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் இடைநடுவில் அந்த ஆண் எம்பி வெளியே சென்றுவிட்டார்.கூட்டம் முடிந்து சற்று நேரத்தில் ஏனைய இரண்டு எம்பிக்களும் சென்றுவிட்டனர்.

ஆனால்,அவர்கள் மூவரும் சம்மேளனக் கூட்டத்துக்கு செல்லவில்லை.இவர்கள் மூவரையும் எதிர்பார்த்து தாமதமாகவே சம்மேளனக் கூட்டம் ஆரம்பமானது.

என்ன நடந்ததோ தெரியவில்லை.நைசாக நழுவிவிட்டனர்.



**கேள்வி : கஷ்டப்படும் இந்த மக்களுக்கு ஏன் அரசால் நிவாரணம் வழங்க முடியால் இருக்கிறது ?**

**கேள்வி : அப்படியென்றால் இந்த வரவு-செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தினுடையதா அல்லது தேர்தலை இலக்கு வைத்ததா?**

**கேள்வி : இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக மக்கள் மீண்டும் கோல்பேஸ் போராட்டம் போன்ற போராட்டத்தில் குதிப்பார்களா?**

**கேள்வி : இந்த அரசுக்கு எதிராக பொது எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்க முடியுமா?**

**கேள்வி : குறித்த தினத்தில் ஜனாதிபதி தேர்தல் நடக்குமா?இல்லையென்றால் அதற்கு எதிராக உங்களது நடவடிக்கை எப்படி இருக்கும்?**

**கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுமா ?**

# நான் ஜனாதிபதி ஆகியிருந்தால்!



-இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் டலஸ் அழகப்பெரும எம்பி.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : நாட்டு மக்கள் உண்மையில் இப்போது எதிர்நோக்கும் பிரச்சினை என்ன?**

பதில் : வாழ முடியாத பிரச்சினை. அதனால்தான் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.போராட்டம் நடத்துகிறார்கள்..

அவர்களிடம் அரசியல் நோக்கம் இல்லை.எந்த கட்சி சார்பாகவும் அவர்கள் இல்லை.வாழ்வதற்காகவே போராட்டம் நடத்துகிறார்கள்.

**கேள்வி : கஷ்டப்படும் இந்த மக்களுக்கு ஏன் அரசால் நிவாரணம் வழங்க முடியால் இருக்கிறது ?**

பதில் : அதற்கு பல காரணங்கள் உண்டு.அதில் முதல் காரணம்தான் இந்த அரசிடம் அதற்கான வேலைத் திட்டம் இல்லாமை.

அவர்களிடம் கனவு மட்டும் உள்ளது. அதைத் தவிர வேற எதுவும் இல்லை. வரியை மட்டும் அதிகரித்தால் அரசின் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று அரசு நினைக்கிறது.இதனால்,மக்கள் மேலும் மேலும் நசுக்கப்படுகிறார்கள்.

சரவதே நாணய நிதியத்தைத் தவிர இவர்களுக்கு வேறு வழி தெரிவதில்லை.அமெரிக்காவின் பொருளாதாரம் பலமாக இருந்தால்தான் அந்த நாணய நிதியமும் பலமாக இருக்கும்.இப்போது அமெரிக்க பொருளாதாரம் சிக்கலில் உள்ளது.

எதிர்வருகின்ற வரவு-செலவுத் திட்டத்திலும் மக்களுக்கு நிவாரணம் இல்லை.

**கேள்வி : அப்படியென்றால் இந்த வரவு-செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தினுடையதா அல்லது தேர்தலை இலக்கு வைத்ததா?**

பதில் : இரண்டும் கலந்ததுதான் இந்த வரவு-செலவுத் திட்டம்.மின் கட்டணத்தை அதிகரிக்கும்போதும்,வரிகளை அறிமுகப்படுத்தும்போதும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையியேயே செய்கிறோம் என்று அரசு கூறுகிறது.

மறுபுறம் எல்லாக் கூட்டங்களிலும் தேர்தல் நடைபெறும் என்று அரசு கூறுகிறது.அப்படியென்றால் சர்வதேச நாணயத்தின் நிபந்தனையும் தேர்தல் நோக்கமும் சேர்ந்ததுதான் இந்த வரவு-செலவுத் திட்டம்.

**கேள்வி : இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக மக்கள் மீண்டும் கோல்பேஸ் போராட்டம் போன்ற போராட்டத்தில் குதிப்பார்களா?**

பதில் : ஆம்..அன்று அந்தப் போராட்டம் ஆரம்பமானது மின் வெட்டை அடிப்படையாக வைத்து இனி அதே போராட்டம் பசியை அடிப்படையாக வைத்துத்தான் இடம்பெறும்.

பசியை அடிப்படையாக வைத்து போராட்டம் ஒன்று தொடங்கினால் அதைக் கட்டுப்படுத்த முடியாது.அது எங்கே போய் முடியும் என்று சொல்ல முடியாது.

அது அன்று இடம்பெற்ற போராட்டத்தை விட பயங்கரமானதாக இருக்கும்.

**கேள்வி : இந்த அரசுக்கு எதிராக பொது எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்க முடியுமா?**

பதில் : நிச்சயமாக முடியும்.தேர்தல் நெருங்கும்போது பொதுவான நோக்கத்துக்காக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்த சந்தர்ப்பங்கள் பல வரலாற்றில் உண்டு.

2010 ஜனாதிபதி தேர்தலின்போது சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட எதிர்கட்சிகளுடன் கைகோர்த்து. மேடையில் ஏறியது.

2015இல் மைத்திரி போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் கூட இவ்வாறு இடம்பெற்றது.இவ்வாறு பல சந்தர்ப்பங்கள் வரலாற்றில் உள்ளன.

கேள்வி :தற்போதைய நிலையில் மின் கட்டண அதிகரிப்பு நியாயமானதா ?

பதில் : சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை காரணமாகவே இந்த அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் அதிகரித்தமையானது மக்கள்மீது மேலும் மேலும் சுமையை ஏற்றும் திட்டமாகும்.இதை ஏற்க முடியாது.

**கேள்வி : இஸ்ரேல்-பலஸ்தீன் இலங்கையைப் பாதிக்குமா ?**

பதில் : 1948இல் இஸ்ரேல் உருவானது முதல் உண்டான பிரச்சினை இது.பலஸ்தீன் தனி நாடு என்பதையும் இஸ்ரேல் தனி நாடு என்பதையும் இலங்கை ஏற்றுக்கொள்கிறது.

இந்தப் பிரச்சினையின் காரணமாகவே ஹமாஸ் உருவானது.இருந்தும்,ஹமாஸை விடுதலை இயக்கமாக ஏற்க முடியாது. அவர்கள் பயங்கரவாத அமைப்பாகும்.

**கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுமா ?**

பதில்: நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்பது 1994இல் இருந்து ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளரும் கொடுத்து வந்த வாக்குறுதியாகும்.

இந்த நிறைவேற்று அதிகாரம் தனி ஒருவரிடம் கொடுத்ததன் விளைவை இப்போது வரை நாம் அனுபவித்து வருகிறோம்.

அதனால் அந்த நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

**கேள்வி : குறித்த தினத்தில் ஜனாதிபதி தேர்தல் நடக்குமா?இல்லையென்றால் அதற்கு எதிராக உங்களது நடவடிக்கை எப்படி இருக்கும்?**

பதில் : தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.ஒத்திப்போடுவதற்கு நாம் இடம் கொடுக்கமாட்டோம்.அதற்காக யாருடனும் கூட்டுச் சேர்வதற்கு நாம் தயார்.

**கேள்வி : அன்று நீங்கள் ஜனாதிபதியாகி இருந்தால் நாட்டின் எப்படி இருந்திருக்கும்?**

பதில் : இப்போது நாடு இருக்கும் இடத்தில் இருக்காது.ரணில் விக்ரமசிங்க என்னை விட சீனியர். அனுபவசாலி.பல தடவைகள் பிரதமராக இருந்துள்ளார்.

ஆனால், பரந்துபட்ட விதத்தில் திட்டமிட்டிருந்தோம். நான் ஜனாதிபதியானால் சஜித் பிதாமதாசாவை பிரதமராக்குவதற்குத் திட்டமிட்டிருந்தோம்.

அதாவது, ஆளும் தரப்பில் ஜனாதிபதி.எதிர் தரப்பில் பிரதமர். அது நடந்திருந்தால் நிறைவேற்று அதிகாரமிக்க இறுதி ஜனாதிபதி நானாகத்தான் இருந்திருப்பேன்.

பொருளாதார பிரச்சினையைத் தீர்த்திருப்போம்.இப்போது இருப்பது போன்ற மிக மோசமான நிலைக்கு நாடு சென்றிருக்காது. – என்றார்.




# தீபாவளி பிறந்த கதை

இந்திய கலாச்சாரம் என்பது பண்டிகைகள் நிறைந்த கலாச்சாரம். ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒவ்வொரு கதை வழங்கப்படுகிறது. தீபாவளிக்கும் நிறையக் கதைகள் உள்ளன. தீபாவளியை தீ ஒளி என முன்னோர் குறிப்பிடுகிறார்கள். தீமை அகன்று நன்மை பிறக்கும் நன்னாள் என்கின்றனர். ஒளி என்பது வெற்றியின் அடையாளம். இருள் என்பது தோல்வியின் பொருள்.

தீபாவளி பண்டிகை தீமையின் வடிவான அசுரர்களை கடவுளின் அவதாரம் அளித்ததால் உருவானது என்கின்றன இந்துப் புராணங்கள். நம்மில் பெரும்பாலானோருக்குத் தெரியும் நராகாசுரன் கதை. நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியை துளைத்து அசுரர்களை அழிக்கச்சென்ற போது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன் நரகாசுரன். அசுரவதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுரசுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்துவிட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

இவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான். இதை அறிந்த மகாவிஷ்ணு அவனை கொல்ல நினைத்தார். ஆனால் அவன் பூமி தாய்க்கு பிறந்தவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே மகாவிஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார். அவன் மகாவிஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்திய பாமா கோபம் அடைந்து நரகாசுரனை போருக்கு அழைத்தார். சத்திய பாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு நரகாசுரன் போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி சரிந்தான். அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது.

அவரிடம் அம்மா, நான் மறைந்த இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி, ஒளிமயமாக கொண்டாட வேண்டும் என்று வேண்டினான். மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இதை கிருஷ்ண லீலை என்கிறது புராணம்.

வால்மீகி இராமாயணத்தில் இராமன் கொடியவனான இராவணனை அழித்துவிட்டு தனது வனவாசத்தை முடித்து கொண்டு மனைவி சீதையுடன் சகோதரன் லட்சுமணன் உடன் அயோத்திக்கு திரும்பிய நாளை மக்கள் விளக்கேற்றி வரவேற்றனர். அதன் தொடர்ச்சியாக தீபாவளி பிறந்தது என்று சொல்லப்படுகிறது.

பொதுவாக தீபாவளி ஐப்பசி மாதங்களில் வரும். ஆனால் ஒருசில வருடங்களில் இந்த மாதத்தில் மாற்றம் நடப்பது உண்டு. ஐப்பசி இல்லை என்றால் புரட்டாசி. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. வாத்ஸ்யாயனர் எழுதிய நூல் யட்ஷ் ராத்திரி என்று தீபாவளி பண்டிகையை குறிப்பிடுகிறது. இது கார்த்திகை மாதம் அமாவாசை தினத்தன்று இரவில் கொண்டாடப்படுகிறது. இதனை சுகராத்திரி என்று மக்கள் குறிப்பிடுகிறார்கள். விஷ்ணுபுராணம் தீபாவளி அன்று அதிகாலையில் நீராடி மகாலட்சுமி பூஜையை அனுஷ்டித்து தீபங்களை ஏற்றி வீடு நிறைய வைத்தால் லட்சுமி கடாட்சம் கைவர கிடைக்கும் என்கிறது.

இன்னொரு கதையும் உண்டு. ஸ்கந்த புராணத்தின் படி, சக்தியின் 21 நாள் கேதாரகௌரி விரதம் முடிந்து இந்த தினத்தில்தான். விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று “அர்த்தநாரீஸ்வரர்“ உருவமெடுத்தார். இறைவன் ஜோதிவடிவாக நம்முள் இருக்கிறான். இந்த ஜோதி வடிவான இறைவனை வழிபடுவதற்கான சிறப்பு நாளே தீபாவளியாகும். தீப வழிபாடு தீபாவளி என நாம் கொள்ளலாம். மேலும் ஆணில் பெண் சரிபாதியாக இணையும் நன்நாளினை நினைவுபடுத்துவதாக தீபாவளி அமைந்ததாகக் கூறுகிறது ஸ்கந்தபுராணம்.

புராணங்கள் இப்படிச் சொல்ல, தீபாவளிப் பண்டிகை எப்போதிருந்து கடைப்பிடிக்கப்பட்டது? ஏன் கொண்டாடப்படுகிறது என்பது பற்றி வேறு சில விளக்கங்களும் சொல்லப்படுகின்றன.

கி.பி.ஆயிரத்து நூறாம் ஆண்டிலேயே தீபாவளி கொண்டாடும் பழக்கம் இந்தியாவில் இருந்திருப்பதாக சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. கி.பி. 1117ல் வாழ்ந்த சாளுக்கிய திரும்புவன மன்னன் ஆண்டு தோறும் சாத்யாயர் எனும் அறிஞருக்கு தீபாவளிப் பரிசு வழங்கியதாக கன்னடத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. கி.பி.1250ல் எழுதப்பட்ட லீலாவதி எனும் மராத்தி நூலில் எண்ணெய் தேய்த்து நீராடுவதை பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

பொதுவாக ஐப்பசி மாதம் பனி நிறைந்த மாதம். இல்லம் தோறும் குளிர் அதிகமாக அண்டும் காலம். இருள் கூடும் காலம் என்றும் இதைக் கூறலாம். அந்தக் காலகட்டத்தில் ஒளியை பெருக்கி உஷ்ணத்தை வீடுகளில் உருவாக்க இந்தப் பண்டிகையை மக்கள் கடைப்பிடிக்க தொடங்கி இருக்கலாம் என்பது கரிசல் இலக்கிய எழுத்தாளர் கி.ராஜநாராயணன் கருத்து.

எல்லோரும் கொண்டாடிய தீபாவளி

தீபாவளிப் பண்டிகையை இந்தியர்கள் மற்றும் இந்துக்களைத் தவிர பிற நாட்டவரும் பிற மதத்தவரும் கூடக் கொண்டாடும் பழக்கம் இருந்துள்ளது.

பழங்கால இந்திய மன்னர்கள் இந்துக்களாக இருந்தாலும் முகலாயர்களாக இருந்தாலும் தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு பல சலுகைகளையும் பரிசுப் பொருட்களையும் அளிப்பதை வழக்கமாக வைத்திருந்தனர். அரசனின் தர்பாருக்குள் மக்கள் அனுமதிக்கப்பட்டு அடிப்படை தேவைகளுக்கு அடித்தளம் போட்டு தரும் நாளாக பண்டிகைகள் திகழ்ந்துள்ளன. முகாலய மன்னர்களில் சிலர் தீபாவளி போன்ற இந்துக்களின் பண்டிகைகளை ஆதரித்தாகவும், பசியாக வந்தவர்களுக்கு விருந்து அளித்ததாகவும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

தமிழ் மன்னர்கள் பண்டைய காலத்தில் ரோம், எகிப்து, பாபிலோன், கிரேக்கம், பாரசீகம் என பல உலக நாடுகளுடன் வர்த்தக தொடர்புகள் இருந்துள்ளன. இந்தியாவிலிருந்து வாசனை திரவியங்கள், மூலிகைகள், யானை தந்ததங்கள் எடுத்து சென்றதாக வரலாற்று கூறுகிறது. அந்த வணிக தொடர்பின் போது இந்தியாவிலிருந்து சென்ற பல வாணிகர்கள் இடம்பெயர்ந்த நாட்டில் தீபாவளி பண்டிகையை கொண்டாடி உள்ளனர். ஆகவே பல தேசங்களுக்கும் பரவி உள்ளது தீபாவளி. சீக்கியர்களும்,சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர்.

1577ம் ஆண்டு பொற்கோவில் கட்டுமானப் பணிகள் துவங்கிய தினம் என சீக்கியர்கள் தீபாவளியைக் கொண்டாடகின்றனர். சமணர்கள், மகாவீரர் முக்தி அடைந்த நாள் என தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.

இப்போது கூட இந்தியா மட்டுமின்றி, இலங்கை, நேபாளம், மியான்மர்,சிங்கப்பூர், மலேசியா,பிஜி, வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளிலும் இந்தப் பண்டிகையை மக்கள் கொண்டாடுகிறார்கள்.



LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.
29/2, ஷனெல் கட்டிடம்,
விஷாகா வீதி, கொழும்பு 04.
தொ.: 011 255 2277
www.liclanka.com


HAPPY
Diwali
தீபாவளி சிறப்பிதழ்



கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர
பயிற்சிப் பாடசாலை.
NP L 2222
"வீதிச்சட்டங்களை கடைப்பிடிப்போம். வாகன விபத்துக்களை தவிர்ப்போம்"
எழுத வாசிக்க முடியாதவர்களுக்கு விசேட வாய்மொழிப் பரீட்சை ஒழுங்கு செய்து தரப்படும்.
விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள்.
உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புகள்.
தவணைமுறைக் கட்டணங்கள்.
கனரக வாகனப் பயிற்சி.
தலைமையகம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 399 480
கிளைகள்
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777




# தீபாவளி கொண்டாடுவதற்கான காரணங்கள் என்ன...?

தீபாவளி கொண்டாடுவதற்கான நிறைய காரணங்களை நமது இந்து புராணங்கள் கூறுகின்றன.

கிருஷ்ணன் நரகாசுரன் என்ற அசுரனைக் கொன்ற போது அந்த நரகாசுரன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று கிருஷ்ணனிடம் வேண்டிக் கொண்டதால் தீபாவளி என்னும் பண்டிகையை கொண்டாடுவதாக கூறப்படுகிறது.

சக்தியின் 21 நாள் விரதமான கேதாரகவுரி விரதம் முடிவுற்றதும் அந்த நாளன்று சிவன் சக்தியை தனது பாதியாக ஏற்றுக் கொண்டு “அர்த்தநாரீஸ்வரர்” ஆக உருவெடுத்ததால் தீபாவளி கொண்டாடப்படுவதாக ஸ்கந்த புராணத்தில் கூறப்படுகிறது.

ராமன் தனது 14 ஆண்டு வனவாசத்தை முடித்து அயோத்தி திரும்பி வருவதால் அந்நாட்டில் உள்ள மக்கள் ராமனை வரவேற்பதற்கு தங்கள் வீடுகளில் விளக்கேற்றி வரவேற்பதாக ராமாயணத்தில் சொல்லப்படுகிறது.

இலங்கையை ஆண்ட ராவணன் சீதையை கடத்திச் சென்று வைத்துக் கொண்டதால் ராமன் ராவணனை எதிர்த்துப் போராடி ராவணனை அழித்து விட்டு, சீதையை மீட்டு கொண்டு தனது தம்பியான லட்சுமணனுடன் அயோத்திக்கு செல்லும் போது அங்குள்ள மக்கள் அவர்களை வரவேற்க நாட்டில் விளக்கேற்றி கொண்டாடி மகிழ்ந்தனர். அதனால் அந்த நாள் தீபாவளியாக கொண்டாடப்படுகிறது என்று ராமாயணத்தில் சொல்லப்படுகிறது.









HAPPY Diwali

# தீபாவளி சிறப்பிதழ்


Marine SPICE
THE TASTE YOU WILL REMEMBER









Savor Global Flavours from

**Indian, Chinese, Middle Eastern, Western and Sri Lankan**



# MARINE SPICE

36, Milagiria Avenue Corner, Mraine Drive, Bambalapitiya
Colombo 04.





HAPPY Diwali

# தீபாவளி சிறப்பிதழ்

## தீபாவளியின் போது விளக்கேற்றுவதன் முக்கியத்துவம் என்ன...?

இந்து மதத்தில் வெளிச்சம் என்பது மிகவும் முக்கியமானதாகும். அது தூய்மை, நன்மை, அதிர்ஷ்டம் மற்றும் சக்தியை குறிக்கும். வெளிச்சம் இருக்கிறது என்றால் இருள் நீங்கி தீய சக்திகள் விலகுகிறது என்று அர்த்தமாகும்.

தீபங்கள் ஏற்றி இறைவனை வழிபடுவது இந்துக்களின் பாரம்பரியமாகும். விளக்கேற்றுவது ஆன்மீகத்தின் வெளிப்பாடு. விளக்கேற்றுவதால் அறியாமை இருள் விலகி, அறிவு பெருகுகிறது. வீடு புனிதமடைகிறது. வளமும் ஆரோக்கியமும் செல்வமும் அதிகரிக்கிறது. நமது வாழ்வின் பாவங்களை துடைக்கின்றது. மனதின் தீய எண்ணங்களை எரிக்கின்றது.

தீபாவளி என்பது அமாவாசை அன்று கொண்டாடப்படுகிறது. அந்நேரம் உலகமே இருளில் மூழ்கியிருப்பதால், லட்சக்கணக்கான விளக்குகளை ஏற்றி இருளை விலக்க மக்கள் முற்படுவர். பொதுவாக இருள் நிலவும் போது, தீய சக்திகள் உலவும் என்று நம்பப்படுகிறது. அதனால் வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் விளக்கேற்றி, தீய சக்திகளை வலுவிழக்கச் செய்வதாக நம்பப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்குள் இருக்கும் ஆன்மீக ஒளியை வெளியிலும் ஒளிரச் செய்ய வேண்டும் என்பதை குறிக்கவே அதனை செய்கின்றனர். மேலும் ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும் அது உணர்த்தும்.

தீபாவளியின் போது விளக்கேற்றுவது என்பது ஆன்மிகம் மற்றும் சமுதாய ரீதியாக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.




Bristol visa CONSULTATIONS

Our Services
- Assistance on Visa Formalities
- Filling Visa Forms
- Writing Cover Letters
- Handling Visa Refusals
- Green Card Guidance
- Travel Insurance

In successful US GREEN CARD Service since 2003

We are a travel advisory service with an admirable track record

Reg W/A 44843

After 20 years at Asset Arcade, 8/3/4, Bristol Street, Colombo 1, we have moved to Metro Homes, 40-1/13, Malay Street, Colombo 2 for another long stay.

0112 393 919 / 077 427 6579 | www.bristolvisa.com

FOR ALL YOUR VISA NEEDS TO
THE UK AND CONTINENTAL EUROPE - THE USA - CANADA - AUSTRALIA

We have no representatives or branches anywhere



THE SASIKA DRIVING SCHOOL

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS

Regd. No: DS882

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
021 221 7678
077 949 5706
077 320 883



email: sasikadrivingschool@gmail.com
Web: sasikalearners.com

கிளை நிறுவனங்கள்

மல்லாகம் 021 224 3393, 077 343 6622
பண்டத்தரிப்பு 021 225 2333, 077 434 3798
கச்சேரி நல்லூர் வீதி (யாழ்ப்பாணம்) 021 221 7578, 077 434 3149, 077 990 5414
புன்னாலைக்கட்டுவன் 021 224 5001, 076 384 0684
வேலணை - 021 221 5472 / 070 368 9319
யாழ் மத்தி: 021 222 8004 / 077 998 6247, 074 254 2264

உரிமையாளரின் தொடர்புகளுக்கு: 0777 226 247 / 077 614 0361




# தீபாவளியின் நோக்கம்

பண்டிகைகள் நம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட நிகழ்வாகும். தனி மனித சமூகத்தின் நல்வாழ்வை கருதி மிகுந்த சிந்தனையுடன் முன்னோர்கள் பண்டிகைகளை ஏற்படுத்தியுள்ளனர். மனிதநேய ஒருமைப்பாட்டை தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வதற்கு பண்டிகைகள் துணைபுரிகின்றன.

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களால் பல்வேறுபட்ட பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. அவ்வகையில் தீபாவளிப் பண்டிகையும் ஒன்றாகும்.

இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்களும், சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடுகின்றனர். தீபாவளி பண்டிகை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### தீபாவளி என்பதன் அர்த்தம்

தீபாவளி என்பதன் பொருளை நோக்குவோமாயின் தீபம், ஆவளி என இரு சொல் இணைந்ததே தீபாவளி ஆகும். தீபம் என்பது “விளக்கு, என்றும் ஆவளி என்றால் “வரிசை என்றும் பொருள் அதாவது தீபங்களை வரிசையாக ஏற்றி ஒளிமயமாக இறைவனை வழிபடும் புண்ணிய தினமே தீபாவளியாகும்.

வாழ்வில் இருள் (தீமைகள்) அகன்று ஒளி (நன்மைகள்) வீசும் என்பது இந்துக்களின் நம்பிக்கை ஆகும்.

### தோற்றம்

தீபாவளிப் பண்டிகையின் தோற்றம் பற்றி இந்துக்கள் மத்தியில் பல்வேறு ஐதீகங்கள் நிலவுகின்றன.

அந்தவகையில் இராமன் 14 ஆண்டுகள் வனவாசம் முடித்து நாடு திரும்பும் போது மக்கள் விளக்கேற்றி வரவேற்றனர் இதனையே தீபாவளியாகக் கொண்டாடுவதாக கருதும் நிலை காணப்படுகின்றது.

யமனை போற்றும் வகையில் தோன்றியதாகவும் கூறப்படுகின்றது. பவிச்சக்கரவர்த்தியைப் போற்றும் வகையில் தோன்றியது என்ற ஐதீகமும் உண்டு.

நரகாசுரன் என்னும் பழைய மரபுக் கதையின் அடிப்படையில் தோன்றியது எனவும் கூறப்படுகின்றது. இதுவே பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நரகாசுரன் கடும் தவத்தினால் பல ஆற்றல்களைப் பெற்றமையால் தானே கடவுளிலும் மேலானவன் என்ற மமதை ஏற்பட்டது. இதனால் தேவர்களையும், ரிஷிகளையும் கொடுமைப்படுத்தினான்.

இவனது கொடுமைகளைத் தாங்க முடியாமல் தேவர்களும் ரிஷிகளும் தம்மைக் காத்தருள வேண்டுமென மகாவிஷ்ணுவிடம் வேண்டினர்.

வேண்டுதலுக்கிணாங்க மகாவிஷ்ணு கண்ணன் அவதாரம் எடுத்து அந்தி சாயும் நேரத்தில் சத்யபாமாவின் உதவியுடன் நரகாசுரனை சம்ஹாரம் செய்தார். இவ்வாறு வதம் செய்த நாளே இருள் நீங்கி ஒளி பெற்ற நாளாக எண்ணி தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது.

### தீபாவளியின் சிறப்பு

தீபாவளிப் பண்டிகையானது பல சிறப்புகளை பெற்றுள்ள பண்டிகையாகும். தீபாவளியன்று நீராடுவதை விசேடமாகக் சொல்லப்படுகின்றது. அதாவது “புனித நீராடல், என்று சொல்லப்படுகின்றது.

நன்மையின் வெற்றி தீமையின் அழிவு என்பதனைத்தான் கிருஷ்ண பகவான் நரகாசுரன் அழிவின் மூலம் உலகத்திற்கு உணர்த்தியுள்ளார்.

தீபாவளியின் சிறப்புகளில் ஒன்றாக சிங்கப்பூரில் தீபாவளிப் பண்டிகையை சிறப்பித்து தபால் தலை வெளியிடப்பட்டுள்ளமையைக் கூறலாம்.

திருமணமான தம்பதியினர் திருமணத்திற்கு பின் வரும் முதல் தீபாவளியைத் தல தீபாவளி என்று சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி அன்று அனைத்து நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும் நீர்நிலைகளிலும் கங்கா தேவி வியாபித்து இருப்பதாக ஐதீகம் உண்டு. இன் நாளில் எண்ணை தேய்த்து நீராடுபவர்கள் கங்கையில் நீராடிய புனிதத்தையும், திருமகளின் அருளையும் பெறுவர்.

### முடிவுரை

தீபாவளித் திருநாளில் எல்லா உறவுகளும் ஒன்றிணைந்து மகிழ்கின்றனர். இதனால் பிரிந்த உறவுகள் இணைகின்றன.

ஒளியினால் நிறைந்து அழகாக காட்சியளிக்கும் இந்நாளின் மூலம் தீமைகள் நீங்குவதால் மன நிறைவு பெறுகின்றது.

பண்டிகையானது தத்துவம் நிறைந்ததாகவும், ஒழுக்கவியல் கருத்துக்களை கொண்டதாகவும் உள்ளது. அவ்வகையில் இது வெறும் பண்டிகை மட்டுமல்லாது வாழ்வினைச் செம்மையாக்கும் அழகிய தீபத் திருநாளாகவும் அமைகின்றது.






# Schoolpreneur 2023 திட்டம்




இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களிடையே தொழில் முனைவோர் மனப்பான்மையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, இலங்கை வர்த்தக சம்மேளனம், கல்வி அமைச்சு மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான அலுவலகம் இணைந்து, நவம்பர் 16ஆம் திகதி முதல் Schoolpreneur 2023 திட்டத்தில் School Enterpreneurship Day எனும் பாடசாலை தொழில்முனைவோர் நிகழ்வை இலங்கை முழுவதும் அறிமுகப்படுத்துகின்றது.

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் உள்ள ஒவ்வொரு மாவட்டம் தெரிவு செய்யப்பட்டு, Schoolpreneur 2023 முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் அநுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, கண்டி, புத்தளம், இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டு, வருடாந்த பாடசாலை நாட்காட்டியில் பாடசாலை தொழில்முனைவோர் தினத்தை உள்ளடக்கியமையானது, இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்களிடையே தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கும், அவர்களை முன்னிலைப்படுத்துவதற்கான ஊக்கமான செயற்பாடாக அமைந்துள்ளது.

இந்த திட்டமானது, இலங்கையின் நிலைபேறான மற்றும் உள்ளீர்க்கப்பட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் இலக்குடன், இளைஞர்களிடையே தொழில் முனைவு மனப்பான்மை மற்றும் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொழில்முனைவு என்பது ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார சிறப்பின் அடிப்படையான தூணாகும். இது புத்தாக்கம், வேலை உருவாக்கம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை தூண்டுகிறது. புதிய யோசனைகள், தயாரிப்புகள், சேவைகளை தொழில்முனைவோர் அறிமுகப்படுத்துகிறார்கள்.

# Softlogic Life இற்கு விருதுகள்





அறிக்கையிடல் மற்றும் பொறுப்புக்கூறலில் சிறந்த நடைமுறைகளுக்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் நிரூபித்து, இலங்கையின் 2வது பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life, CMA Excellence in Integrated Reporting Awards 2023 நிகழ்வில் சிறந்து விளங்கியது.

அதன் 2022 ஆண்டு அறிக்கையின் தொனிப்பொருளான 'Reimagining' ஐந்து மதிப்புமிக்க விருதுகளை வென்றது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் Softlogic Life இன் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் சிறப்பிற்கான விரும்பத்தக்க ஒட்டுமொத்த தங்கம் உட்பட ஐந்து விருதுகள் இதில் அடங்கும்.

Softlogic Life இப்போது கூட்டுத்தாபன இலங்கையின் சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒருங்கிணைந்த அறிக்கையிடல் சிறப்புக்கான ஒட்டுமொத்த தங்க விருதை வென்றது.

இந்த அங்கீகாரத்தை வென்ற இலங்கையின் தலைசிறந்த நிறுவனமாக மாறியுள்ளது. மேலும், இந்தச் சாதனையானது, CMA விருது வழங்கும் நிகழ்வு வரலாற்றில் இந்த விருதின் மூலம் கௌரவிக்கப்படும் ஒரே இலங்கைக் காப்புறுதி நிறுவனமாக Softlogic Life இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், Softlogic Life இன்னும் நான்கு விருதுகளை வென்றது அவையாவன: காப்புறுதி துறைக்கான சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கை, பொருள்தன்மை குறித்த சிறந்த வெளிப்பாடுக்கான விருது, இலங்கையில் சிறந்த பத்து ஒருங்கிணைந்த அறிக்கைகளுக்கான விருது மற்றும் இலங்கையில் சிறந்த நிதி இயக்குநருக்கான விருதினை நிறுவனத்தின் நிதி இயக்குநர் Nuwan Withanageக்கு வழங்கப்பட்டது.




# Heart to Heart நிதியத்துக்கு Enchanteur பங்களிப்பு

உலகப் புகழ் பெற்ற நறுமணப் பொருள் வர்த்தகநாமமான Enchanteur, இதய நோயாளர்களின் நலன் கருதி செயற்படும் தொண்டு நிதியமான Heart to Heart உடன் அண்மையில் கைகோர்த்துள்ளது.

இதற்கான உடன்படிக்கை அண்மையில் நடைபெற்ற வைபவமொன்றில் வெளியிடப்பட்டதோடு Enchanteur மற்றும் Heart to Heart நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

விற்பனையாகும் ஒவ்வொரு Enchanteur உற்பத்தியிலும் குறிப்பிட்ட ஒரு தொகை இதய நோயாளர்களின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு மாதாந்தம் Heart to Heart நிதியத்துக்கு போய் சேரும் வகையில் மேற்படி ஒத்துழைப்பு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

“தரமான சுகாதாரச் சேவைக்குள்ள பிரவேசம் மக்களின் அடிப்படை உரிமை என்பதை நாம் திடமாக நம்புகின்றோம். அதன் பொருட்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் தொண்டர் அடிப்படையில் தமது பங்களிப்பை வழங்கும் குழுவினருடன் இணைந்து பணியாற்ற முடிந்துள்ளமை பெருமை அளிக்கிறது. – என Enchanteur நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு உதய நிஸ்சங்க தெரிவித்தார்.

# கலாநிதி ஜயந்த தர்மதாசவுக்கு கோவிட்-19 மீள்தன்மை விருது



சிங்கப்பூர் பிரதமர் அலுவலகம், நவலோக்க ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவரும், கொழும்பில் உள்ள சிங்கப்பூர் குடியரசின் கௌரவத் தூதருமான கலாநிதி ஜயந்த தர்மதாசவுக்கு, COVID-19 Resilience Awardஐ அண்மையில் வழங்கியது.

தர்மதாசவின் சிறந்த சேவைக்காக சர்வதேச நிறுவனம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்டமை ஒரு நாடு என்ற வகையில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டிய தனித்துவமான தருணமாகும்.

சிங்கப்பூர் பிரதமர் அலுவலகத்தால் வழங்கப்படும், COVID-19 Resilience Award, கோவிட்-19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் தனிநபர்களின் அர்ப்பணிப்பு, அசைக்க முடியாத ஆதரவு மற்றும் சிறந்த பங்களிப்புகளுக்காக கௌரவிக்கப்படுகிறது.

இந்த விருது அக்டோபர் 12, 2023 அன்று தாஜ் சமுத்ரா ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கல்வி மற்றும் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் கலாநிதி எம். மாலிகி ஒஸ்மானால் கலாநிதி தர்மதாஸவிற்கு வழங்கப்பட்டது.

தொற்றுநோய்களின் போது சிங்கப்பூர் குடிமக்களுக்கு அத்தியாவசியமான தூதரக உதவிகளை வழங்குவதில் தர்மதாச மிகப்பெரிய பங்கைக் கொண்டிருந்தார்.

40க்கும் மேற்பட்ட சிங்கப்பூர் குடிமக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பத்திரமாக நாடு திரும்புவதற்கு உதவினார். இது அவர்களின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான அவரது வலுவான அர்ப்பணிப்பைக் காட்டியது.

# ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் 15 ஆண்டுகள் நிறைவு

HEMAS HOSPITALS
By your side

இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற சுகாதாரப் பராமரிப்பு வர்த்தகநாமமான ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ், 2023 ஆம் ஆண்டில் தனது 15 ஆண்டுகள் நிறைவைப் பெருமையுடன் கொண்டாடுகின்றது.

குறிப்பிடத்தக்க இச்சாதனை, ஆரோக்கியமான வாழ்வின்மீது அது காண்பிக்கும் ஓயாத அர்ப்பணிப்பைப் பிரதிபலிப்பது மட்டுமன்றி, இலங்கையின் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் சமூகத்தைக் கட்டியெழுப்புதல், புத்தாக்கம் மற்றும் சாதனைகள் நிறைந்த போற்றத்தக்க பயணத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

நோயாளரை மையப்படுத்திய கவனிப்பு, அதிநவீன தொழில்நுட்பம், சமூக சேவை முன்னெடுப்புக்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கான நலத் திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, மிகவும் தைரியமான வணிக நகர்வுகளின் மூலமாக ஹேமாஸ் வைத்தியசாலை குழுமம், சுகாதாரத்தை மேம்படுத்தும் அதேவேளை, உள்ளங்களைக் கவர்ந்து, இலங்கையில் மிகவும் நம்பிக்கை மிக்க மற்றும் போற்றப்படுகின்ற நிறுவனம் என்ற தனது இடத்தை ஆணித்தரமாக நிலைநாட்டியுள்ளது.

வத்தளை மற்றும் தலவத்துகொடை போன்ற வளர்ச்சி வாய்ப்புக்கள் கொண்ட சுகாதார வசதிகள் குறைந்த சமூகங்கள் மத்தியில் வைத்தியசாலைகளை ஆரம்பித்து, இச்சமூகங்களின் வளர்ச்சி வாய்ப்புக்களை முன்னெடுப்பதில் ஒரு உந்துசக்தியாகத் திகழ்ந்து வருகின்ற ஹேமாஸ் வைத்தியசாலை குழுமம் பின்தங்கிய மக்களுக்கு பொருளாதார வசதிக்கேற்ற கட்டுபடியான வழிகளில் சுகாதாரப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுத்து வருகின்றது.



# கழிவு முகாமைத்துவத் தீர்வு

இலங்கையில் சுழற்சிப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இரு தரப்பும் கொண்டுள்ள அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, நிலைபேற்றியலுடனான கழிவு முகாமைத்துவத் தீர்வுகளை வழங்குவதற்காக INSEE Ecocycle மற்றும் மிகப் பாரிய மின்-வர்த்தக நிறுவனமான Daraz ஆகியன கைகோர்த்துள்ளன.

இந்த வகையில் முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ள இக்கூட்டாண்மையின் கீழ், Daraz இன் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட புத்தாக்கமான, நிலைபேற்றியல் கொண்ட வள மீட்புத் தீர்வுகளை INSEE Ecocycle வழங்கும்.

பிரதானமாக காலாவதியான அல்லது சேதமடைந்த, விரைவாக விற்கப்படுகின்ற நுகர்வோர் பொருட்களை உள்ளடக்கும் வகையில், நுயசயண இன் களஞ்சியசாலையில் தோற்றுவிக்கப்படுகின்ற கழிவுகளை நிர்வகிப்பதில் கவனம் செலுத்தப்படும்.

"இது INSEE Ecocycle நிறுவனத்தில் நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய ஒரு தருணமாகும். Daraz உடன் முதன்முதலாக ஏற்படுத்திக் கொண்டுள்ள கூட்டாண்மையாக இது அமைந்துள்ளதுடன், மின்-வர்த்தக நிறுவனமொன்றும் ஒத்துழைக்கும் முதலாவது சந்தர்ப்பமும் இதுவாகும்," என்று சுஜித் குணவர்த்தன அவர்கள் குறிப்பிட்டார்.

"இச்செயல்திட்டத்தின் மத்திய மையமாக எமது அதிநவீன வள மீட்பு மையம் அமைந்துள்ளதுடன், இங்கே கழிவுகளை நாம் தரம் பிரித்து, செயலாக்க முன் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இத்தகைய செயல்திட்டங்களில், வர்த்தகநாம பாதுகாப்பு, ஒழுங்குமுறைகள் மற்றும் தரநியமங்களின் இணக்கம் ஆகியவற்றில் நாம் விசேட கவனம் செலுத்துகிறோம்," என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

# Eco-Bag திட்டம் அறிமுகம்



சுற்றாடலை பேணும் செயற்பாட்டின் முக்கிய நகர்வாக, லங்கா சதொச நிறுவனத்துடன் ஹேமாஸ் கைகோர்த்துள்ளது. அதனூடாக சமூகத்தில் அதிகரித்துச் செல்லும் பிளாஸ்ரிக் மாசுக்கு தீர்வு காண்கிறது.

ஹேமாஸ் கன்சியுமர் பிராண்ட்ஸ் விற்பனை அணியினால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தினூடாக, லங்கா சதொசவில் ஹேமாஸ் தயாரிப்புகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மீளப் பயன்படுத்தக்கூடிய இலவச பை வழங்கப்படும்.

முதற் கட்டமாக,சூழலுக்கு நட்பான 40,000 பைகள் நாடு முழுவதிலும் காணப்படும் 440 லங்கா சதொச விற்பனையகங்களில் விநியோகிக்கப்படும்.

விற்பனை நிலையங்களின் வாடிக்கையாளர்கள் சமூகமளிப்புக்கமைய இந்த நூஉழ பைகள் பகிர்ந்தளிக்கப்படுவதுடன், இந்த பைகள் பிரத்தியேகமான குறியீட்டு கட்டமைப்பை கொண்டிருக்கும்.

அதனூடாக தொடர்ச்சியாக இவற்றை பயன்படுத்துகையில், அவற்றை மீளப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் வாடிக்கையாளர்களுக்கு விலைக்கழிவுகள் வழங்கப்படும். அதனூடாக சமூகத்தாரிடையே நிலைபேறான பழக்கங்களை ஊக்குவிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், பொறுப்பு வாய்ந்த பிளாஸ்ரிக் கழிவு அகற்றலை ஊக்குவிக்கும் வகையில், ஹேமாஸ் மற்றும் லங்கா சதொச ஆகியன, சதொச விற்பனை நிலையங்களில் பிரத்தியேகமான பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பு பகுதிகளை நிறுவியுள்ளன.

இந்த பகுதிகளில் பொறுப்பு வாய்ந்த வகையில் பிளாஸ்ரிக் பொருட்களை இடும் வாடிக்கையாளர்களுக்கு கூப்பன்கள் வழங்கப்பட்டு, மாதாந்த அதிர்ஷ்டசாலி தெரிவு முன்னெடுக்கப்படும்.

அதனூடாக பொறுப்பு வாய்ந்த கழிவு அகற்றல் நடவடிக்கைகளில் அவர்கள் பங்கேற்கின்றமைக்காக மேலதிக வெகுமதிகள் வழங்கப்படும்.

# மக்கள் வங்கி அனுசரணை




இலங்கையின் ஏற்றுமதி சமூகத்திற்கான அதன் ஓயாத ஆதரவை மேலும் வலுப்படுத்தும் வகையில், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்த 25வது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளுக்கு பிளாட்டினம் அனுசரணை வழங்குவதற்கு மக்கள் வங்கி அண்மையில் முன்வந்துள்ளது.

மக்கள் வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற இதனைக் குறிக்கும் நிகழ்வில், மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர், பிளாட்டினம் அனுசரணையை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி கிங்ஸ்லி பேர்னாட் அவர்களிடம் வழங்கி இந்நிகழ்வைக் கௌரவித்துள்ளனர்.

இந்த குறிப்பிடத்தக்க பங்களிப்பு, நாட்டின் ஏற்றுமதியாளர்களின் வளர்ச்சி மற்றும் வெற்றியை உறுதி செய்வதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, இந்த கூட்டாண்மை தொடர்பில் தனது உற்சாகத்தை வெளிப்படுத்தி கருத்து வெளியிடுகையில், "மக்கள் வங்கி எப்போதும் இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்கான அர்ப்பணிப்புடன் உள்ளது.

25வது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளுக்கு பிளாட்டினம் அனுசரணை வழங்குவது இதற்கு ஆதரவளிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் நாம் கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும். நமது நாட்டின் ஏற்றுமதித் துறைக்கான இந்த ஒத்துழைப்பு நமது நாட்டின் ஏற்றுமதியின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் என்பதுடன், அரசாங்கக் கொள்கைக்கு இணங்க பொருளாதார வளர்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று குறிப்பிட்டார்.





# Radisson Hotel Colombo வசதிகள் குறைந்த இளையோருக்கான இலவச பயிற்சி நெறி

Radisson Hotel Colombo அனுசரணையுடன் கூடிய வதிவிடப் பயிற்சி நெறியை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலட்சிய நோக்கம் கொண்ட அதே நேரம் வசதிகள் குறைந்த இளையோருக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒரு முக்கிய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதன் முதற்கட்ட பயிற்சியாளர்களின் குழு அண்மையில் சமையற்கலை மற்றும் சமையலறை செயற்பாடுகள் பற்றிய மூன்று மாத தீவிர பயிற்சியை நிறைவு செய்தது.

இந்த ஒரு வருடகால தகவமைவு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி நெறியானது சமையலறை செயற்பாடுகளின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அடிப்படை அறிவு மற்றும் திறன்களை ஆரம்பகட்ட பயிற்சியாளர்களுக்கு வழங்குவதற்காக கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

Radisson Hotel Colombo இனது நிறைவேற்று தலைமை சமையல் நிபுணர் திரு. மனுஜய எதிரிசிங்க இக் கற்கைநெறியின் கட்டமைப்பை பின்வருமாறு விவரித்திருந்தார்:

"முதல் ஆறு மாதங்களுக்கு பயிற்சியாளர்கள் சமையலறைச் செயற்பாடுகள் மற்றும் கோப்புகளைக் கையாளுவது பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவு மற்றும் நடைமுறை அனுபவத்தைப் பெறுவார்கள். எங்கள் ஹோட்டலில் ஆசிய, மேற்கத்திய, இலங்கை மற்றும் இந்திய மெனுக்களுக்கு சேவையளிக்கும் வகையில் அமைந்துள்ள ஏழு சமையலறைகள், ஒரு குளிர் சமையலறை, வெதுப்பகம் மற்றும் விசேட மேற்கூரை மதுபான விடுதி ஆகியவற்றுடன் பயிற்சியாளர்களுக்கு பரந்த அளவிலான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றார்.

# யூனியன் வங்கியின் உறுதியான நிதிப் பெறுபேறு





2023 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த நடப்பு ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில், யூனியன் வங்கி உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளது.

வங்கியின் பிரதான வங்கியியல் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றகரமான நிலை பதிவாகியிருந்ததுடன், ஒட்டுமொத்த வருமானம் ரூ. 17,314 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது ஒப்பீட்டளவில் 36% உயர்வாகும்.

வங்கியின் வருமானத்தில் தேறிய வட்டி வருமானம் (NII) பிரதான பங்களிப்பை வழங்கியிருந்ததுடன், இந்தப் பெறுமதி 19% இனால் அதிகரித்து ரூ. 4822 மில்லியனாக பதிவாகியிருந்தது. கடன் பிரிவுகள் மற்றும் திறைசேரி சொத்துகள் ஆகியவற்றினால் கிடைத்திருந்த விளைவுகளின் அடிப்படையில் இந்தப் பெறுமதி உயர்வடைந்திருந்தது.

சர்வதேச இறையாண்மை கடனீட்டு (ISBs) பத்திரங்களை வங்கி கொண்டிருப்பதில்லை என்பதுடன், இலங்கை அபிவிருத்தி கடனீட்டு (SLDB's) பத்திரங்கள் DDO இன் பங்கின் அடிப்படையில் திறைசேரி கடனீட்டு பத்திரங்களுக்காக இலங்கை ரூபாய்க்கு பரிமாற்றப்பட்டிருந்தது.

தேறிய வட்டி எல்லைப் (NIM) பெறுமதி 72 bps ஆல் அதிகரித்திருந்தது. இதில் சொத்துக்கள் புத்தகத்தின் மீள்விலையிடல் மற்றும் வட்டி செலவீனங்களின் முறையான முகாமைத்துவம் ஆகியன பங்களிப்பு வழங்கியிருந்தன.

தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் 9% இனால் அதிகரித்திருந்தது. இதில் கடன் அட்டைகள், வெளிநாட்டு பண அனுப்புகைகள் மற்றும் வியாபார வர்த்தகங்களில் அதிகரித்த செயற்பாடுகள் போன்றன பங்களிப்புச் செய்திருந்தன. மதிப்பிறக்கங்களுக்கு முன்னரான வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 6,185 மில்லியனாக காணப்பட்டது.

இது 11% அதிகரிப்பாகும். காலப்பகுதிக்கான வங்கியின் மதிப்பிறக்க கட்டணம் ரூ. 1,200 மில்லியனாக காணப்பட்டது. முறையான செலவு நிர்வாக செயற்பாடுகள் காணப்பட்ட போதிலும், வங்கியின் மொத்த தொழிற்பாட்டு செலவுகள் 22% இனால் அதிகரித்து ரூ. 3,838 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில், கட்டணப் பட்டியல் கட்டணங்கள், சம்பளங்கள் மற்றும் பரிமாற்றங்கள் தாக்கங்களின் அடிப்படையிலான பொது செலவுகள் போன்றன பங்களிப்புச் செய்திருந்தன.

# Healthguard Distribution இற்கு சான்றிதழ்



Sunshine Holdings PLC இன் சகல விதமருந்து வகைகளின் முழு அளவிலான விநியோகப் பிரிவான Healthguard Distribution ஆனது அண்மையில் சிறந்த விநியோக நடைமுறைகளுக்கான (GDP) சான்றிதழினைத் தனதாக்கிக் கொண்டது.

Bureau Veritas Indவை இனால் வழங்கப்பட்ட இம்மதிப்புமிக்க சான்றிதழானது Healthguard Distribution இன் சிறந்த இறக்குமதித் தரம், களஞ்சியப்படுத்துதல் மற்றும் விநியோக செயல்பாடுகள் தொடர்பான முகாமைத்துவக் கடப்பாட்டிற்குக் கிடைத்த உயரிய சான்றாகும்.

GDP சான்றிதழானது மருந்து வகைகளின் விநியோகச் சங்கிலி தொடர்பான விதிமுறை வழுவாத தரநிறுணயத்தினை நிலைநாட்டுவதில் Healthguard Distrubution இன் அர்ப்பணிப்பினைக் குறிக்கின்றது.

Bureau Veritas India, ஆனது சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை வழங்கும் ஓர் ஆணைக்குழுவாகும். இது வர்த்தகத் தொழில்துறையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான தேவைகளுக்கு இணங்கிச் செல்வதனை உறுதி செய்வதற்காக Healthguard Distrbution இன் செயல்முறைகள், உள்கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள் தொடர்பாக மிகுந்த உன்னிப்பான மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது.

இச்சாதனையானது, Healthguard Distrbution ஆனது கையாளும் ஒவ்வொரு மருந்துப் பொருட்களின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் ஒருமைப்பாட்டிற்கான அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

# விவசாய அடைகாத்தலை செயற்படுத்தும் Hatch



GIZ Sri Lanka மற்றும் நுரு உடன் இணைந்து, "Green Innovation Lab" விவசாய அடைகாத்தல் (Agri Incubator) திட்டத்தை Hatch முன்னெடுத்துள்ளது.

இது புத்தாக்க கண்டுபிடிப்புகளை முன்மாதிரியாக வெளிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை முன்வைப்பதோடு, வணிக ரீதியான நம்பகத்தன்மைக்கான யோசனைகளை சோதிக்கவும், அதனை மீள உறுதிப்படுத்தவும், சரிபார்க்கவுமான ஒரு சூழல் தொகுதியை வழங்குகிறது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பயணத்திற்கு குறிப்பிடத்தக்க வகையில் உதவுவதற்கும் நாட்டின் விவசாயத் தொழில்துறையை மாற்றியமைப்பதற்கும் இது மிகவும் முக்கியமானது.

இந்த அடைகாத்தலானது, குறிப்பாக, போசணை, நிலைபேறான பொதியிடல் உபகரணங்கள், இயந்திரங்கள் ஆகிய புத்தாக்க கண்டுபிடிப்புகளில் கவனம் செலுத்துகிறது.

இத்திட்டத்திற்காக, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 200 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. கொழும்பில் உள்ள Hatch இல் "Hackathon" திட்டத்திற்காக 20 வணிக தொடக்கங்கள் (startups) தெரிவு செய்யப்பட்டன.

அதில் தெரிவு செய்யப்பட்ட 10 புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள், Hatch இனால் செயற்படுத்தப்படும் 3 மாத முழு அளவிலான வர்த்தக அடைகாத்தல் திட்டத்தில் இணைக்கப்பட்டனர்.





# செலான் வங்கியின் இலாபம் அதிகரிப்பு

2023 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 4.49 பில்லியனை செலான் வங்கி அறிவித்திருந்தது.

முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 2.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 79.47% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. சவால்கள் நிறைந்த பொருளாதார மற்றும் சந்தைச் சூழ்நிலைகளிலிருந்து மீண்டெழுந்திறன் இதனூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் வங்கி தனது இலாபமீட்டலில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. வரிக்கு முந்திய இலாபம் (ீடீவு) 100% எனும் அபார வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ. 7.181 பில்லியனாக பதிவாகியிருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி ரூ. 3.577 பில்லியனாக காணப்பட்டது.

வருமானம் மற்றும் குறைந்தளவு மதிப்பிறக்க கட்டணங்கள் இந்தப் பெறுமதியில் வளர்ச்சியில் அதிகளவு பங்களிப்புச் செய்திருந்தன.

தேறிய வட்டி வருமானம் மற்றும் தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் போன்றவற்றினூடான வருமானத்தினால், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மொத்த தொழிற்படு வருமானத்தை துரிதப்படுத்தியிருந்தன. 2022 ஆம் ஆண்டில் ரூ. 35.194 பில்லியனாக பதிவாகியிருந்த இந்தப் பெறுமதி 6.19% இனால் உயர்ந்து ரூ. 37.373 பில்லியனாக பதிவாகியிருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டு பகுதியில், செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 9.28% இனால் உயர்ந்து ரூ. 30.554 பில்லியனாக பதிவாகியிருந்தது. கட்டண அடிப்படையிலான வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 4.520 பில்லியனிலிருந்து 19.29% ஆல் உயர்வடைந்து ரூ. 5.392 பில்லியனாக உயர்ந்திருந்தது.

இதில் வரவு மற்றும் கடன் அட்டைகளிலிருந்தான வருமானம், வியாபார தரகு வருமானம் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புகைகளில் உயர்வு போன்றன பங்களிப்புச் செய்திருந்தன. மேலும், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் வங்கி உறுதியான தேறிய வட்டி எல்லைப் பெறுமதியான 5.98% ஐ பேணியிருந்தது.

# SLT-MOBITEL mSpace Code Blast Hackathon வெற்றிகரமாக நிறைவு

தேசத்தின் டிஜிட்டல் முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் புத்தாக்கமான தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தியிருந்த coding ஆர்வலர்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைந்த புத்தாக்கவியலாளர்களை ஒன்றிணைத்து, SLT-MOBITEL mSpace Code Blast Hackathon 2023 நிகழ்வு வெற்றிகரமாக நிறைவடைந்திருந்தது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL மற்றும் hSenid Mobile ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த Hackathon Clhf, coders மற்றும் non-coders க்கு கைகோர்த்து, புத்தாக்கமான செயற்பாடுகளில் ஈடுபட்டு, தொழில்நுட்ப ரீதியான தீர்வுகளை வடிவமைப்பதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது.

mSpace Code Blast Hackathon 2023 இல் பங்கேற்றிருந்தவர்கள் மத்தியில் கடும் போட்டி நிலவியிருந்ததுடன், மூன்று அணியினர் முன்னிலையாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இன்றைய காலகட்டத்தில் பிரயாணிகள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சனைக்கு தீர்வை வழங்கியிருந்த வுநயஅ ஙுநமெநசள வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டாமிடத்தை மொழி பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலான தீர்வை வடிவமைத்திருந்த Team SinhalaGPT பெற்றுக் கொண்டது. இந்தப் புத்தாக்கமான தீர்வினூடாக மொழி இடைவெளியை நிவர்த்தி செய்து, குடிமக்களுக்கு மேம்படுத்திய அணுகலை பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்திருந்தது.

மூன்றாமிடத்தை தமது புரட்சிகரமான app வெளியிட்டிருந்த Team Fine Pay தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் தண்டப் பணத்தை செலுத்தும் முறைமையை எளிமைப்படுத்துவதற்கு நீண்ட காலமாக நிலவிய தேவையை நிவர்த்தி செய்வதாக இந்த தீர்வு அமைந்திருந்தது.

புத்தாக்கத்துக்கும் தொழில்நுட்பமுயற்சியாண்மைக்கும் ஆக்கத்திறன், பிரச்சனையை தீர்த்தல் மற்றும் கைகோர்ப்பு ஆகியவற்றை ஒன்றிணைத்து வாய்ப்பளிப்பதாக உயஉமயவாழடெ அமைந்திருந்தது. பிரயோக ரீதியான அனுபவத்தையும், பெறுமதி வாய்ந்த இணைப்புகளையும் தொழில்நுட்பத்துறையில் வழங்குவதாக அமைந்திருந்தது.





# ஹெவலொக் சிட்டிமோலில் சிக்னேச்சர்

சிக்னேச்சர், இலங்கையில் தயாரிக்கப்படும் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமான சிக்னேச்சர், தனது 10வது காட்சியறையை ஹெவ்லொக் சிட்டிமோலில் திறந்து வைத்தது.

புதிய கிளை பிரபல இசைக்கலைஞர் சங்க தினேத், பிரபல சமையற்காரர் சரித் என் சில்வா (வைல்ட் குக்புக்) மற்றும் பிரபல கலைஞர் மாதவ விஜேசிங்க ஆகியோரால் பல சிக்னேச்சர் ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் முன்னிலையில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நாளில், புதிய சிக்னேச்சர் ஷோரூம் கடை முழுவதும் தாராளமாக 20% தள்ளுபடியுடன் ஷொப்பிங் செய்பவர்களை மகிழ்வித்தது, இது ஃபேஷன் ஆர்வலர்களுக்கு தவிர்க்க முடியாத இடமாக அமைந்தது.

ஹெவலொக் சிட்டி மோலின் 02ஆம் நிலை எண். 4இல் அமைந்துள்ள இந்த காட்சிறை இணையற்ற வசதியையும் விசாலமான வசதிகளையும் வழங்குகிறது.

முறையான, சம்பிரதாயமான, ஸ்மார்ட் கேவல், சாதாரண, கைத்தறி, பார்ட்டி உடைகள், சூட்கள், சட்டைகள், பிளேசர்கள் மற்றும் கால்சட்டைகள் ஆகியவற்றின் விரிவான தொகுப்புடன், வாடிக்கையாளர்கள் சமீபத்திய போக்குகளுக்கேற்ப மற்றும் உயர்தர தயாரிப்புகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் வழங்குகின்றது.



# அலியான்ஸ் - ஓட்டோ மிராஜ் இணைவு

வாடிக்கையாளர்களுக்கு நிகரற்ற அனுபவத்தை வழங்கும் முகமாக, மோட்டார் வாகன திருத்தவேலைகள் தொழில்துறையில் ஒரு முன்னணி நாமமான ஓட்டோ மிராஜ் (Auto Miraj) உடன் புதியதொரு பங்குடமையை அலியான்ஸ் லங்கா ஏற்படுத்தியுள்ளது.

2023 ஜூலையில் ஏற்படுத்தப்பட்ட இந்த ஒத்துழைப்பு, அலியான்ஸ் லங்கா காப்புறுதியைக் கொண்டுள்ளவர்களுக்கு விபத்து திருத்தவேலை அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்தவுள்ளது.

இதன் பிரகாரம், இந்தக் கூட்டாண்மையின் மூலமாக, இரு ஸ்தாபனங்களும் விபத்து திருத்தவேலைகள் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் காப்புறுதி தொடர்பான தேவைப்பாடுகளை தங்குதடையின்றி முன்னெடுக்க முடிகின்றமையால், அலியான்ஸ் லங்கா வாடிக்கையாளர்கள் சிரமங்களற்ற நடைமுறையை தற்போது எதிர்பார்க்க முடியும்.

விபத்து நேருகின்ற தருணத்தில், பாதுகாப்பு, ஆறுதல் மற்றும் நலன் ஆகிய முக்கியமானவற்றில் அலியான்ஸ் காப்புறுதிதாரர்கள் கவனம் செலுத்த முடியும் அதேசமயம், திருத்தவேலைகள் தொடர்பான நுணுக்கமான நடைமுறைகளை அவர்கள் சார்பிலே எவ்வித சிரமங்களுமின்றி திறன்மிக்க வழியில் நிர்வகிக்கப்படும்.

விபத்து திருத்த வேலைகளின் பின்னர் அவற்றுக்கு 6 மாத கால உத்தரவாதம் அடங்கலாக, அலியான்ஸ் வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலான திருத்த வேலை சேவையின் அறிமுகம் இந்த கூட்டாண்மையின் மூலமாகக் கிடைக்கின்ற முக்கிய வரப்பிரசாதங்களில் ஒன்றாகும்.




# DIMOவிற்கு தங்க விருதுகள்

இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் (CMA) ஏற்பாடு செய்திருந்த, CMA Excellence in Integrated Reporting 2023 விருதுகளில், ஒட்டுமொத்த தங்க விருதின் இணை வெற்றியாளராக, முன்னணி நிறுவனமான DIMO கௌரவிக்கப்பட்டுள்ளதோடு, மொத்தமாக 4 விருதுகளை நிறுவனம் பெற்றுள்ளது.

'CMA Excellence in Integrated Reporting Awards 2023', நிகழ்வானது, கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

அங்கீகாரம் மிக்க இந்த நிகழ்வானது தொடர்ச்சியாக 9ஆவது வருடமாக இம்முறையும் சிறப்பாக இடம்பெற்றது. இதில் உயர் விருதுக்கு மேலதிகமாக, 'Top Ten Integrated Annual Reports' (சிறந்த பத்து ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கைகள்) பிரிவிலும் DIMO கௌரவிக்கப்பட்டது.

அத்துடன், 'Special Award for Best Concise Annual Report' (சிறந்த சுருக்கமான வருடாந்த அறிக்கைக்கான விசேட விருது) மற்றும் 'Special Award for Best Integrated Thinking' (சிறந்த ஒருங்கிணைந்த சிந்தனைக்கான விசேட விருது) ஆகியவற்றையும் நிறுவனம் வென்றுள்ளது.

# ராஜாவுக்கு தங்க விருது




1928 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ராஜா ஜுவல்லர்ஸ், அன்று முதல், தங்க நகை உலகின் முடிசூடா மன்னனாக திகழ்ந்து வருகின்றது.

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தொழில்துறை விசேடத்துவ விருதுகளில் மதிப்பு மிக்க தங்க விருதைப் பெற்ற ராஜா ஜுவல்லர்ஸ், மீண்டும் அதன் திறனை நிரூபித்துள்ளது.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டு, அண்மையில் நெலும் பொகுணவில் இடம்பெற்ற இந்த பெருமைக்குரிய நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

தேசிய கைத்தொழில்துறை விசேடத்துவ விருதுகள் 2023 இல் (National Industry Excellence Awards 2023) 21 சிறந்த தொழில்துறைகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இங்கு பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்கள், 18 கைத்தொழில்துறை வல்லுநர்களைக் கொண்ட நடுவர் குழுவினால், பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

குறிப்பாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பு, உற்பத்திச் செயன்முறை மற்றும் தரநிலைகள், சூழலுக்கு உகந்த நடைமுறைகள், பணியாளர் பயிற்சி மற்றும் மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்தல் ஆகிய விடயங்கள் இங்கு உன்னிப்பாக மதிப்பீடு செய்யப்பட்டது.

ராஜா ஜுவல்லர்ஸ் அதன் செழுமையான வரலாற்றுப் பாரம்பரியம் மற்றும் சிறந்து விளங்கும் அர்ப்பணிப்புடன், இந்த அனைத்து விடயங்களிலும் சிறந்து விளங்கியதன் மூலம், குறிப்பிடத்தக்க சாதனையான இந்த தங்க விருதை பெற வழிவகுத்துள்ளது.

# இந்திய ரூபாய் நாணயம் வெளிநாட்டு நாணய கணக்காக அறிமுகம்

Nations TrustBank

வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை கேட்டறிவதற்கான முதல் படியாகவும், இந்திய நாணயத்தை பரிந்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக அங்கீகரிக்கும் இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல் வெளியாகியிருந்ததை தொடர்ந்தும், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி அந்நாணயப் பாவனையை அறிமுகம் செய்துள்ளது.

வெளிநாட்டு நாணயப் பாவனையில் இந்திய நாணயத்தை உள்வாங்கியுள்ளமையானது, வங்கி மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கின்றது. இந்திய நாணயத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட கணக்குகளை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி தற்போது வழங்குவதுடன், இதில் PFCA (பிரத்தியேக வெளிநாட்டு நாணயக் கணக்கு) மற்றும் BFCA (வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு) ஆகியன அடங்கியுள்ளன.

இந்தியாவுடன் வியாபார கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு உதவும் வகையில் இந்த கணக்குகள் அமைந்துள்ளன. நாணய பரிமாற்று செயன்முறைகளை சீராக்கம் செய்வது, கொடுக்கல் வாங்கல் செலவுகளை குறைப்பது மற்றும் ஒட்டு மொத்த சௌகரியத்தை அதிகரிப்பது ஆகியன இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும்.

சர்வதேச வியாபார செலுத்துகைகளுக்கு இந்திய நாணயத்தை பயன்படுத்துவது என்பது பொருளாதார ஊக்குவிப்பை தூண்டுவது, வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது போன்றன தூ ண்டப்படுவதுடன், வங்கிக்கு மாத்திரமன்றி, அதன் வாடிக்கையாளர்களுக்கும் அனுகூலமளிப்பதாக அமைந்திருக்கும்.

மேலும், பரந்தளவு சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனளிக்கும். இந்த நகர்வுடன், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, தனது போட்டிகரமான நிலையை உறுதி செய்வதுடன், வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற சேவைகளினூடாக வருமானத்தை அதிகரிப்பதாக அமைந்துள்ளது. அதனூடாக வெளிநாட்டு நாணய இருப்புகளின் வளர்ச்சி மற்றும் நிலைபேறாண்மைக்கு பங்களிப்பு வழங்குவதாக அமைந்துள்ளது.

இந்திய நாணய கணக்குகளால் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்க முடியும். இதில் நாணய பணமீட்டல்கள், நாணய வழங்கல்கள் மற்றும் சர்வதேச வியாபார செலுத்துகைகளான இறக்குமதிகள், ஏற்றுமதிகள், கடன் பத்திரங்கள் (LCs) மற்றும் மூலதன கொடுக்கல் வாங்கல்கள் அல்லது இலங்கைக்கு அப்பாலான முதலீடுகள் தவிர்ந்த வங்கி உத்தரவாதமளிப்புகள் போன்றன அடங்கியுள்ளன.

இம் மின்னிதழ் பத்திரிகையானது இல. 36/03, மகா வித்தியாலய மாவத்தை, கொழும்பு 13. எனும் முகவரியிலிருந்து வெளியிடப்படுகின்றது.